අධිකරණ, රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා, පළාත් පාලන සහ කම්කරු අමාත්‍යාංශය
நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு
Ministry of Justice, Public Administration, Home Affairs, Provincial Councils, Local Government and Labour

රාජ්‍ය පරිපාලන අංශය
பொது நிருவாகப் பிரிவு
Public Administration Division

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No: PUBAD/SLAS/INTERVIEWS/ SPECIAL- I | ඔබේ අංකය / உமது இல / Your No: | දිනය / திகதி / Date: 2024.10.10 |

இலங்கை நிருவாக சேவை தரம் I இன் மற்றும் தரம் II இன் உத்தியோகத்தர்களுக்கான அறிவித்தல்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**
**கட்டுப்பாட்டு பதவிக்காக தகவல் தொழில்நுட்ப அறிவுடைய உத்தியோகத்தர்களை**
**இணைத்துக் கொள்ளல்**

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் வெற்றிடமாக காணப்படும் கட்டுப்பாட்டு பதவிக்கான **தகவல் தொழில்நுட்ப அறிவுடைய** கீழ்வரும் தகமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கை நிருவாக சேவையின் தரம் Iஇன் மற்றும் தரம் II இன் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

i. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ விடயதானத்துடன் தொடர்புடைய போதுமானளவு கோட்பாட்டு அறிவினை பெற்றிருத்தல் மற்றும் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு அதிகமாக அவ் விடயத்திற்கு உரிய கடமை அனுபவம் கொண்ட உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும். ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தல் வேண்டும்.

ii. சிறந்த சேவை நிலையமொன்றில் பணியாற்றக்கூடிய **அதிகபட்ச சேவை காலத்தினை பூர்த்தி செய்யாத** உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

02. அதன்படி மேற்கூறப்பட்ட தகமைகளை பூர்த்தி செய்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் காணப்படும் இலங்கை நிருவாக சேவையின் பதவிக்காக இணைந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பதாரிகள் அடிப்படை தகமைகள் மற்றும் ஏனைய தகவல்கள் அடங்கிய தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவை பத்திரத்தினை, அது தொடர்பிலான எழுத்துமூல கோரிக்கையுடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பின் உறுதிப்படுத்திய பிரதிகளை 2024.10.30 தினத்தன்று அல்லது அதற்கு முன்னரான தினத்திற்கு முன்னர் தமது நிறுவன தலைவரின் மூலம் நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சின் செயலாளருக்கு முன்வைப்பதற்கு கருமாற்றவெனவும் மற்றும் அதன் இணைப்பிரதியொன்றை pubad.dslas@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

03. மேலும், விண்ணப்பங்களை அனுப்பும் போது, விண்ணப்பதாரிகள் இவ் பதவிக்காக தகமை பெறின் தற்போது சேவையாற்றுகின்ற சேவை நிறுவனத்திலிருந்து பிரதிநிதியொருவரை கொண்டு /இன்றி /பின்னர் பெற்றுக் கொடுக்கும் அடிப்படையில் விடுவிக்க முடியும் என அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்கள தலைவர் உறுதிப்படுத்தி விண்ணப்பத்தினை முன்வைக்க வேண்டியதுடன் விண்ணப்பத்தினை கோரும் இறுதித் தினத்திற்கு பின்னர் எவ்வித காரணங்களின் மீதும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென மேலும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./எஸ். ஆலோக பண்டார
செயலாளர்
நீதி பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு
தொலைபேசி : 0112-698605 / தொலைநகல் : 0112 – 683651
மின்னஞ்சல்: pubad.dslas@gmail.com